வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 30.1.2026 நேரம்-மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

*தலைப்புச் செய்திகள்*

ஐரோப்பிய யூனியன் உடனான வரியில்லா வர்த்தக ஒப்பந்தம், முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கிற்கு ஏற்ப அமைந்திருப்பதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று தேசத் தந்தை மகாத்மா காந்தி நினைவு நாள், புதுச்சேரி உட்பட நாடு முழுவதும் தியாகிகள் தினமாக கடைபிடிக்கப் பட்டது.

குடியரசு தின அணிவகுப்பில் கலந்து கொண்ட, சிறந்த அலங்கார ஊர்திகளுக்கு, பாதுகாப்புத் துறை இணையமைச்சர் திரு சஞ்சய் சேத், இன்று விருதுகளை வழங்கினார்.

இந்தியாவிற்கும், அரபு நாடுகளுக்கும் இடையிலான வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம், புதுடெல்லியில் நாளை நடைபெற உள்ளது.

மோடி கட்டுரை (15)

இந்தியாவிற்கும், ஐரோப்பிய யூனியனுக்கும் இடையே அண்மையில் எட்டப்பட்ட வரியில்லா வர்த்தக ஒப்பந்தம், முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கிற்கு ஏற்ப அமைந்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். இதுகுறித்து மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் எழுதியுள்ள கட்டுரை ஒன்றை பிரதமர் சமூக ஊடகத்தில் பகிர்ந்துகொண்டு, புதிய உடன்பாட்டினால் சந்தை வாய்ப்புகள் விரிவடைந்து, வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும் என்றும், நாட்டின் அடிப்படை நலன்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்றும்

கூறியுள்ளார். இந்தியா-ஐரோப்பிய யூனியன் வரியில்லா வர்த்தக ஒப்பந்தம், வரலாற்று சிறப்பு வாய்ந்த மைல் கல் என்று, அமைச்சர் திரு கோயல் தமது கட்டுரையில் கூறியுள்ளார். இந்த உடன்பாட்டினால் பொருளாதாரத்தின் முக்கியத்துறைகள் எப்படியெல்லாம் வலுப்பெறும் என்பது குறித்தும், நாட்டின் எல்லா பிராந்தியங்களையும் சேர்ந்த அனைத்து மக்களும் எப்படியெல்லாம் பயன்பெறுவார்கள் என்பது குறித்தும் கட்டுரையில் அமைச்சர் விளக்கியுள்ளார்.

காந்தி -டெல்லி (9)

இன்று தேசத் தந்தை மகாத்மா காந்தி நினைவு நாள், தியாகிகள் தினமாக கடைபிடிக்கப்படுகிறது. புதுடெல்லியில், ராஜ்காட்டில் உள்ள மகாத்மாகாந்தி சமாதியில், குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி இராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர். அனைத்து மத பிராத்தனையும் இடம் பெற்றது. சுதேசி இயக்கத்தை வலியுறுத்தியவர் மகாத்மா காந்தி என்றும், வலுவான சுயசார்பு இந்தியா ஒன்றை உருவாக்கும் முயற்சிகளுக்கு அடித்தளமே சுதேசி பொருட்கள் தான் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக ஊடகத்தில் கூறியுள்ளார்.

புதுச்சேரி காந்தி (15)

தேசத்தந்தை மகாத்மா காந்தியின் நினைவு நாள் இன்று புதுச்சேரியில், அரசு சார்பில் அனுசரிக்கப்பட்டது. முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவை தலைவர் திரு ஆர் செல்வம், பொதுப்பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், துணை சபாநாயகர் திரு ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர் திரு பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு சத்தியமூர்த்தி ஆகியோர், கடற்கரை சாலையில் உள்ள காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியின்போது, பாரதியார் பல்கலைக்கூட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் தேச பக்திப் பாடல்கள் இசைக்கப்பட்டன. 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மகாத்மா காந்தி நினைவு நாளை ஒட்டி, புதுச்சேரி அரசின் சுகாதாரத்துறை சார்பில் இன்று நடைபெற்ற தொழுநோய் குறித்த விழிப்புணர்வு பேரணியை, சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் செவ்வேள் கொடியசைத்து தொடக்கி வைத்தார். விழிப்புணர்வு பதாதைகளை ஏந்திய வண்ணம், செவிலிய பயிற்சி மாணவ-மாணவியர், இப்பேரணியில் கலந்து கொண்டனர்.

*ஊர்தி – விருது - 1*(4)

குடியரசு தின அணிவகுப்பில் கலந்து கொண்ட, சிறந்த அலங்கார ஊர்திகள் மற்றும், அணிவகுப்புக் குழுக்களுக்கு, பாதுகாப்புத் துறை இணையமைச்சர் திரு சஞ்சய் சேத், இன்று புதுடெல்லியில், விருதுகளை வழங்கினார். பரிசு விபரங்கள் குறித்து ஒரு தொகுப்பு............

(வாய்ஸ்)

*ஊர்தி – விருது - 2*(17)

(வாய்ஸ்)

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் அலங்கார ஊர்திகள் பிரிவில், கணேச உற்சவம் குறித்த மகராஷ்டிரா அரசின் அலங்கார ஊர்தி, முதல் பரிசு வென்றது. ஜம்மு-காஷ்மீர் மற்றும் கேரள ஊர்திகள், இரண்டு மற்றும் மூன்றாம் இடம் பெற்றன. முப்படைகளுக்கு இடையே, இந்திய கடற்படை, சிறந்த அணிவகுப்புக் குழுவிற்கான விருதை வென்றுள்ளது. மத்திய ஆயுதப் படைகளுக்கான பிரிவில், டெல்லி காவல் துறைக்கு முதல் பரிசு கிடைத்துள்ளது. மத்திய அமைச்சகங்கள் மற்றும் துறைகளுக்கான பிரிவில், வந்தே மாதரம் தேசபக்தி பாடல் குறித்த கலாச்சார அமைச்சகத்தின் அலங்கார ஊர்தி, முதல் பரிசு வென்றுள்ளது. இதே கருப்பொருள் பற்றிய, மத்திய பொதுப்பணித் துறையின் அலங்கார ஊர்திக்கும், நடனக் குழு ஒன்றுக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன. மை-கவ் இணையதளம் மூலமான வாக்கெடுப்பு முடிவுகளின்படி, சிஆர்பிஎப் மற்றும் அசாம் ரெஜிமென்ட் படைப் பிரிவுக்கு, சிறந்த

அணிவகுப்புக் குழுவிற்கான விருது வழங்கப்பட்டுள்ளது. இதே முறையில், குஜராத், உத்திரபிரதேஷ் மற்றும் ராஜஸ்தான் மாநில அரசுகளின் அலங்கார ஊர்திகள், முதல் மூன்று பரிசுகளை வென்றுள்ளன.

*அமித்ஷா – அசாம்* -1 (16)

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று திப்ருகரில், அசாம் மாநிலத்திற்கான பல்வேறு வளர்ச்சி திட்டங்களை தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இத்திட்டங்களின் மொத்த மதிப்பு, ஆயிரத்து 715 கோடி ரூபாயாகும். அசாம் சட்டமன்றத்திற்கு 284 கோடி ரூபாய் மதிப்பில், இரண்டாவது வளாகம் கட்டும் பணிகளும் இதில் அடங்கும்.

இந்தியாவிற்கும், ஐரோப்பிய யூனியனுக்கும் இடையிலான வரியில்லா வர்த்தக உடன்பாட்டினால் அசாமின் தேயிலை ஏற்றுமதி அதிகரிக்கும் என்று விழாவில் பேசுகையில் அமைச்சர் தெரிவித்தார். வெள்ளப் பிரச்சனை இல்லாத மாநிலமாக அசாமை மேம்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் கூறினார். அசாமில் முன்பிருந்த காங்கிரஸ் அரசு, ஊடுருவல் பிரச்சனையை, ஓட்டு வங்கி அரசியலுக்கான கருவியாகவே பயன்படுத்தியதாக திரு அமித் ஷா குற்றம் சாட்டினார். பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசுதான், அசாம் மாநிலத்தின் வளர்ச்சிக்கு பல்வேறு உள்கட்டமைப்பு திட்டங்களை கொண்டு வந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

*இந்தியா -அரபு நாடு* (10)

இந்தியாவிற்கும், அரபு நாடுகளுக்கும் இடையிலான வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம், புதுடெல்லியில் நாளை நடைபெற உள்ளது. இந்தியாவும்- ஐக்கிய அரபு அமீரகமும் இணைந்து இக்கூட்டத்திற்கு தலைமை ஏற்க உள்ளன. அரபு லீக் உறுப்பு நாடுகளும், இந்த அமைப்பின் தலைமை செயலரும், கூட்டத்தில் பங்கேற்க உள்ளனர்.

இதற்கென கத்தார், கோமரோஸ், லிபியா, சோமாலியா உள்ளிட்ட நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும், அரபு லீக் பொது செயலர் திரு அகமது கெஹிட் உள்ளிட்ட தலைவர்களும், ஏற்கனவே புதுடெல்லி வந்து சேர்ந்துள்ளனர். அரபு லீக் பொதுச் செயலரை இன்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் சந்தித்து பேசினார்.

*பிரகதி 1 (8)*

உள்கட்டமைப்பு திட்டங்களின் அமலாக்கத்தில் தடைகளைக் களைந்து பணிகளை துரிதமாக நிறைவேற்றி முடிக்கும் வகையில், பிரதமர் திரு நரேந்திர மோடியின் எண்ணத்தில் உருவாகி வடிவமைக்கப்பட்ட பிரகதி டிஜிட்டல் வசதி, உயர்நிலை தலையீடு மூலம் திட்டங்களைக் குறித்த காலத்தில் நிறைவேற்றி முடிப்பதில், கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக முக்கிய பங்காற்றி வருகிறது. பிரகதி வசதி மூலமான கண்காணிப்புடன் அமலாகி வரும், மத்திய ஜல்சக்தி அமைச்சகத்தின் பல்வேறு திட்டங்கள் குறித்து, ஒரு தொகுப்பு.....

(வாய்ஸ்)

*பிரகதி 2 (17)*

(வாய்ஸ்)

<u>நாட்டில், நீர் வள ஆதாரங்களின் மேலாண்மை, நதிகளின் புத்தாக்கம், குடிநீர் விநியோகம் மற்றும் துப்புரவு தொடர்பான கொள்கைகளையும்-திட்டங்களையும் உருவாக்கி, அமல்படுத்தும் பொறுப்பு மத்திய ஜல்சக்தி அமைச்சகத்திடம் உள்ளது. தற்போது நீர் வள ஆதாரங்கள் துறை தொடர்பான 93 திட்டங்கள், மொத்தம் 2.86 லட்சம் கோடி ரூபாய் மதிப்பில், ஜல்சக்தி அமைச்சகத்தால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கங்கை புனரமைப்பு திட்டம், மற்றும், 66 நீர்பாசன திட்டங்களும், 26 கழிவுநீர் திட்டங்களும் இதில் அடங்கும். திட்டங்களின் அமலாக்கத்தை கண்காணிப்பதற்கான PMG இணையதளத்தில் இடம் பெற்றுள்ள இத்திட்டங்களில், மொத்தம், சுமார் 43 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான, 10 முக்கிய நீர்பாசன திட்டங்களை, பிரதமர் திரு</u>

நரேந்திர மோடி, முன்னுரிமை அடிப்படையில், பிரகதி வசதி மூலம் மறு ஆய்வு செய்துள்ளார். இதில் ஒரு திட்டம் ஏற்கனவே நிறைவேற்றி முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு வந்துள்ளது. இதர 9 நீர்பாசன திட்டங்களின் அமலாக்கத்தில் முக்கிய முன்னேற்றங்கள் எட்டப்பட்டு, 70 முதல் 95 சதவிகித பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 27 நீர்பாசன திட்டங்கள் தொடர்பாக அமைச்சகத்தால் இனம் காணப்பட்ட 126 பிரச்சனைகளில்,

*பிரகதி 3 (5)*

பிரகதி மறு ஆய்வின்போது எழுப்பப்பட்ட 14 பிரச்சனைகள் உட்பட, மொத்தம் 106 பிரச்சனைகளுக்கு திறம்பட்ட முறையில் தீர்வு காணப்பட்டுள்ளது. எஞ்சிய 20 பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் முயற்சிகளும், பிரகதி மறு ஆய்வுக் கட்டமைப்பின் தீவிர கண்காணிப்பில் உள்ளதாக, ஜல் சக்தி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*எரிசக்தி வாரம்* (14)

கோவாவில் நடைபெற்ற இந்தியா எரிசக்தி வார விழா, இன்றுடன் முடிவிற்கு வந்துள்ளது. எரிசக்தி வார விழாவில், உலக அளவிலான பல்வேறு நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகள் கலந்து கொண்டு, எரிசக்தி, எரிவாயு உள்ளிட்ட துறைகள் தொடர்பாக பல்வேறு உடன்பாடுகளை இறுதி செய்தனர். எரிசக்தி துறையில், பசுமை ஹைட்ரஜன், உயரழுத்த உயிரி எரிவாயு, சிறு அளவிலான அணுக்கரு உலைகள் என பல்வேறு புதிய வாய்ப்புகளை இந்தியா வழங்குவதாக, பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்திப் சிங் புரி, இன்று, நிறைவு விழாவில் பேசுகையில் கூறினார். பெட்ரோலியத் துறை செயலர் டாக்டர் நீரஜ் மிட்டல் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி அதிகரித்து வருவதால், எரிசக்தி தேவையும் அதிகரிக்கும் என்றார். உள்நாட்டு எண்ணெய் கண்டுபிடிப்பு பணிகளுக்கும், பசுமை எரிபொருட்கள் மற்றும் சுயசார்பு முயற்சிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

*மாண்டவியா* (7)

மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா இன்று புதுச்சேரி வந்துள்ளார். மாநில பிஜேபி தலைமையகத்தில் இன்று நடைபெற்ற கட்சியின் தேர்தல் மேலாண்மை குழு கூட்டத்தில் அவர் கலந்து கொண்டு, வரவிருக்கும் சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய விதம் குறித்து ஆலோசனை வழங்கினார். பிஜேபி மாநில தலைவர் திரு ராமலிங்கம், மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், மற்றும் பிஜேபி சட்டமன்ற உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டனர்.

*வானிலை* (11)

இன்றும், நாளையும், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி - காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், திருப்பத்தூர் உள்ளிட்ட மாவட்டங்களில் அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும் என்றும், சேலம், ஈரோடு, திருச்சி, கரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் அதிகாலை வேளையில் லேசான பனி மூட்டம் இருக்கலாம் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 1 ஆம் தேதி, தென் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் லேசான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், கொடைக்கானல் மலைப்பகுதியில் சுமார், 6.7 டிகிரி செல்சியஸ் குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகி இருந்தது.

*கிரிக்கெட்* (5)

மகளிர் கிரிக்கெட்டில், குஜராத் – மும்பை அணிகளுக்கு இடையிலான WPL போட்டி, வதோதராவில் இன்று மாலை நடைபெற உள்ளது. ஆடவர் கிரிக்கெட்டில், இந்தியா – நியூசிலாந்து அணிகளுக்கு

இடையிலான 5 ஆவது மற்றும் இறுதி 20 ஓவர் போட்டி, திருவனந்தபுரத்தில் நாளை நடைபெறும்.

*மாவோயிஸ்ட்* (4)

சத்தீஸ்கர் மாநிலம் சுக்மா மாவட்டத்தில் இன்று 2 பெண்கள் உட்பட 4 மாவோயிஸ்டுகள், ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு, போலீசாரிடம் சரணடைந்துள்ளனர். இவர்களின் தலைக்கு ஏற்கனவே, 8 லட்சம் ரூபாய் வெகுமதி அறிவிக்கப்பட்டிருந்தது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

ஐரோப்பிய யூனியன் உடனான வரியில்லா வர்த்தக ஒப்பந்தம், முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கிற்கு ஏற்ப அமைந்திருப்பதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று தேசத் தந்தை மகாத்மா காந்தி நினைவு நாள், புதுச்சேரி உட்பட நாடு முழுவதும் தியாகிகள் தினமாக கடைபிடிக்கப் பட்டது.

குடியரசு தின அணிவகுப்பில் கலந்து கொண்ட, சிறந்த அலங்கார ஊர்திகளுக்கு, பாதுகாப்புத் துறை இணையமைச்சர் திரு சஞ்சய் சேத், இன்று விருதுகளை வழங்கினார்.

இந்தியாவிற்கும், அரபு நாடுகளுக்கும் இடையிலான வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம், புதுடெல்லியில் நாளை நடைபெற உள்ளது.

---------------------

வைஷ்ணவ் (15)

செயற்கை நுண்ணறிவின் தாக்கங்கள் குறித்து பிப்ரவரி 16 முதல், 20 ஆம் தேதி வரை, புதுடெல்லியில் நடைபெற உள்ள உச்சி மாநாடு, உலகிலேயே இத்தகைய மிகப் பெரிய மாநாடாக அமையும் என்று, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார். உலக அளவிலான சுமார் 100 நிறுவனங்களின் தலைமை

செயல் அதிகாரிகள், இம்மாநாட்டில் பங்கேற்க உள்ளதாக, அவர் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இந்தியாவில் ஏஐ சூழல் உருவாக்கப்பட்ட விதம் பாராட்டத் தக்கது என்றும், நடப்புச் சூழல் உற்சாகம் அளிக்கும் விதத்தில் அமைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையே, ஏஐ உச்சி மாநாட்டை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்காட்சியில் பங்கேற்க விரும்பும் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக, ஸ்டார்ட் - அப் சூழலை ஊக்குவிப்பதற்கான, மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் Wave – X அமைப்பு அறிவித்துள்ளது.

*மலர் கண்காட்சி* (16)

புதுச்சேரியில், வேளாண் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, 3 நாள் வேளாண் விழா, மற்றும், 36 ஆவது காய்-கனி-மலர் கண்காட்சியை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று மாலை தொடங்கி வைத்தார். தாவரவியல் பூங்காவில் நடைபெறும் இக்கண்காட்சியில் மலர்ப் படுகை, கனி வடிவமைப்பு, அலங்கார மலர்ச் செடிகள், காய்கறி மற்றும் தோட்டப் பயிர்களும், பல்வேறு அரசுத் துறைகளின் அரங்குகளும் இடம் பெற்றுள்ளன. இயற்கை விவசாயம் குறித்த முக்கிய அரங்கு ஒன்றும் கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ளது. வேளாண் விளை பொருட்களுக்கு சான்றிதழ் மற்றும் சந்தை வாய்ப்பு பெறுவது குறித்தும், நீடித்த வேளாண்மையில் விவசாயிகளுக்கு உள்ள வாய்ப்புகள் குறித்தும் நாளை கருத்தரங்கு அமர்வுகள் நடைபெற உள்ளன. ஐக்கிய அரசு அமிரகம் உள்ளிட்ட வெளி நாடுகளில் இருந்தும் இறக்குமதியாளர்கள் பங்கேற்க உள்ளனர். கண்காட்சியின் தொடக்க விழாவில், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார், சட்டமன்ற உறுப்பினர் திரு அனிபால் கென்னடி, தலைமை செயலர் டாக்டர் சரத் சவுகான் ஆகியோர் கலந்து கொண்டனர்.